பக்கங்கள் : ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 சித்திரை 06 வியாழக்கிழமை (19.04.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 143

# மோதல் தணிப்பு, சமாதான முயற்சியில் தேக்கம்;

# பேச்சு நடத்த நோர்வேத் தூதுவர் வன்னிக்கு

## புலிகள் நடத்திய வான் தாக்குதலின் பின்னர் அங்கு வரும் முதலாவது முக்கிய ராஜதந்திரி



கிளிநொச்சி,ஏப்ரல் 19

★ வடக்கு - கிழக்கில் அதிகரித்து வரும் மோதல்களைத் தணிப்பது.

★ கடந்த வருடம் ஒக்ரோபருக்குப் பின்னர் ஒரேயடியாகத் தேக்கநிலை அடைந்திருக்கும் சமாதானப் பேச்சுக்களின் எதிர்காலக் கதி.

இவை இரண்டு குறித்தும் விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்துவதற்காக இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர், எதிர்வரும் திங்கட்கிழமை வன்னிக்கு முக்கிய விஜயம் ஒன்றை மேற்கொள்கிறார்.

கடந்த பெப்ரவரி மாதத்தின் பின்னர் இப்போது இங்கு வருகைதரும் நோர்வேத் தூதுவர், விடுதலைப் புலிகள் கடந்த மாதம் 26ஆம் திகதி, கட்டுநாயக்கா விமானத்தளம் மீது தாக்குதல் நடத்திய பின்னர் வன்னிக்கு வரும் முதலாவது முக்கிய ராஜதந்திரியும் ஆவார்.

கிழக்கில் விடுதலைப்புலிகளைத் தோற்கடித்து விட்டோம், அவர்களை அங்கிருந்து துரத்தி விட்டோம் என்று இராணுவத் தரப்பும் -

கிழக்கில் விடுதலைப் புலிகளைப் பல வீனமுறச் செய்தது போன்று, வடக்கிலும் அவர்கள் மீதான தாக்குதல்கள் விரைவில் முழு வீச்சில் தொடங்கப்படும். அவர்களை ஒடுக்கிவிடும் தாக்குதல் வடக்கிலும் நாம் தொடங்கவேண்டியுள்ளது என்றும் -

போர்நிறுத்த ஒப்பந்தம் என ஒன்று இப்போது இல்லை. போர் நிறுத்த ஒப்பந்தம் எனக் கூறுவதில் அர்த்தமில்லை. உண்மை என்னவெனில் சர்வதேச சமூகத்தைத் திருப்திப்படுத்துவதற்காகவே, போர் நிறுத்த ஒப்பந்தம் இப்போது அமுலில் இல்லை என்பதனை உத்தியோகபூர்வமாக நாம் வெளிப்படுத்தாமல் உள்ளோம் என்றும் -

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ அறிவித்திருக்கும் பின்னணியிலும் -

விடுதலைப் புலிகளை அரசாங்கத்துடன் சம அந்தஸ்தில் வைத்துக் கருதமுடியாது; அவ்வாறு கருதுவது பொறுப்பற்றது என்று அமைச்சின் செயலாளர் பாலித கொஹன்ன கடுந்தொனியில் கூறிய பின்னணியிலும் -

சமாதானப் பேச்சுக்களின் அனுசரணையாளரான நோர்வே நாட்டின் தூதுவரின் வன்னி விஜயம் அமைகின்றது.

(06 ஆம் பக்கம் பார்க்க)

## குடாக்கடலில் மீன்பிடிப்பதற்கு நேற்று அனுமதியில்லை

யாழ்ப்பாணம்,ஏப்.19

குடாக்கடலில் மீனவர்கள் தொழில் செய்வதற்கு நேற்று அனுமதி வழங்கப்படவில்லை.

பாஷையூர், குருநகர், கொழும்புத்துறை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மீனவர்கள் தொழிலுக்காகப் புறப்பட்டுச் சென்று, ஏமாற்றத்துடன் திரும்பினர் எனத் தெரிவிக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் தமது தொழிலுக்குச் சென்ற மீனவர்கள், கடலில் இடம்பெற்ற மோதல் சம்பவத்தையடுத்து தொழிலைக் கைவிட்டுத் திரும்பியிருந்தனர் என்பது தெரிந்ததே. (அ-1)

## படகு அகதிகளுக்கு அடித்தது அதிர்ஷ்டம்; அமெரிக்கா சென்று வாழ்வதற்கு வசதி!

சிட்னி,ஏப்.19

அகதி அந்தஸ்து கோரும் பொருட்டு ஆஸ்திரேலியா நோக்கிப் படகில் சென்ற வேளை பிடிபட்டு -

இப்போது பசுபிக் தீவான நவ்றுவில் தங்கவைத்து விசாரிக்கப்படும் 83 இலங்கைத் தமிழர்களும் -

அமெரிக்காவில் அகதிகளாக ஏற்றுக்கொள்ளப்படும் எதிர்பாராத திருப்பமும் வாய்ப்பும் கிடைத்துள்ளன.

வாஷிங்டனில் கடந்த வாரம் அமெரிக்காவுக்கும் ஆஸ்திரேலியாவுக்கும் இடையில் கைச்சாத்தான 'பரஸ்பர உதவி ஒப்பந்தம்' இலங்கைத் தமிழர்களுக்குப் பெரும் வரப்பிரசாதமாகக் கிடைத்துவிட்டது.

இந்த ஒப்பந்தத்தின் பிரகாரம், 'நவ்று' தீவில் வைத்து விசாரிக்கப்படும் 83 இலங்கைத் தமிழர்கள் அமெரிக்காவில் அகதிகளாக (06 ஆம் பக்கம் பார்க்க)

## எரிபொருள்களின் விலைகள் உயர்ந்தன!

நேற்று நள்ளிரவு தொடக்கம் டீசல், மண்எண்ணெய் ஆகியவற்றின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

ஒருலீற்றர் டீசலின் விலை 3 ரூபாவாலும் மண்எண்ணெயின் விலை 2 ரூபாவாலும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

உலக சந்தையில் மசகு எண்ணெயின் விலை அதிகரித்ததே இந்த விலையேற்றத்துக்கக் காரணம் என்று பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

இதேவேளை -

பால்மா வகைகளின் விலைகளும் விரைவில் அதிகரிக்கும் என்று அரச தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (அ-1-4)

## புங்குடுதீவில் மீட்கப்பட்ட சடலத்தை றாகமவுக்கு அனுப்ப நீதிமன்று அனுமதி

யாழ்ப்பாணம்,ஏப்.19

புங்குடுதீவுப் பகுதியில் மார்ச் 14ஆம் திகதி கண்டுபிடிக்கப்பட்ட ஆணின் சடலத்தை, மரபணு பரிசோதனைக்காக றாகம ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்வதற்கு ஊர்காவற்றுறை நீதிமன்றம் நேற்றுமுன்தினம் அனுமதி வழங்கியுள்ளது.

இச்சடலம் அடையாளம் காண்பதற்காக யாழ். ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டிருந்தது.

குறிப்பிட்ட சடலம் காணாமற்போன போதகர் ஜிம் பிறவுண் அடிகளாருடையது என்பதற்கான தடயங்கள் கிடைத்துள்ளதாக குற்றப் புலனாய்வுப் பொலிஸார் நீதிமன்றத்தில் அறிக்கை சமர்ப்பித்தனர்.

சடலத்தை மரபணுச் சோதனை உட்பட மேலதிக விசாரணைக்கு கொழும்பு றாகம ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்வதற்கு அனுமதிக்குமாறு மனு ஒன்றும் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டது.

அதனை ஏற்றுக்கொண்ட நீதிமன்றம் உரிய அனுமதியை வழங்கியது. (அ-1)

## அல்லைப்பிட்டிக் காவலரணில் இருந்து தீர்க்கப்பட்ட வேட்டுக்குச் சிப்பாய் பலி!

யாழ்ப்பாணம்,ஏப்.19

அல்லைப்பிட்டியில் கரையோரமாக அமைந்துள்ள படையினரின் காவலரண்களில் ஒன்றில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார்.

செவ்வாயன்று இரவு 9.30 மணியளவில் இடம்பெற்ற இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில், கொல்லப்பட்ட சிப்பாயின் மரண விசாரணை ஊர்காவற்றுறை நீதிவான் ஜெயராமன் றொக்ஸி முன்னிலையில் நேற்று இடம்பெற்றது.

படையினரின் காவல் நிலையை நோக்கி ஒருவர் வந்தார். அவரை யார் என விசாரித்தபோது சம்பந்தப்பட்டவர் குரல் கொடுக்காததையடுத்து, காவலரணில் நின்ற படையினர் வேட்டுக்களைத் தீர்த்தனர். அப்போது அவர் உயிரிழந்தார் என்றும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

விசாரணையை அடுத்து, சடலத்தை கொழும்பு சட்ட வைத்திய அதிகாரியின் பிரேத பரிசோதனையின் பின் உறவினர்களிடம் ஒப்படைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார். (அ-1)

## ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று வத்திக்கான் பயணம்

கொழும்பு, ஏப். 19

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அமைச்சர்கள் அடங்கிய குழு ஒன்றுடன் நேற்று வத்திக்கான் பயணமானார்.

'மிஹின் லங்கா' விசேட விமானம் ஒன்றில் ஜனாதிபதி தலைமையிலான குழுவினர் நேற்றுக்காலை கொழும்பிலிருந்து புறப்பட்டுச் சென்றனர் என்று ஜனாதிபதி செயலகம் தெரிவித்தது.

அமைச்சர்கள் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே, பீலிக்ஸ் பெரேரா, மில்ரோய் பெர்னாண்டோ மற்றும் ரோஹித்த போகொல்லாகம ஆகியோரும் ஜனாதிபதியுடன் செல்கின்றனர்.

நான்கு நாள் விஜயமாக [illegible]ரோமாபுரியில் உள்ள வத்திக்கான் செல்லும் ஜனாதிபதி, [illegible] கத்தோலிக்கர்களின் திருத் தந்தையான பாப்பரசர் 16 ஆவது பெனடிக்ற் ஆண்டகையைச் சந்திப்பார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இலங்கைக்கான வத்திக்கான் பிரதிநிதி அதி மேதகு மரியோ ஷெனாரி, கட்டுநாயக்கா விமானநிலையத்துக்குச் சென்று வத்திக்கான் புறப்பட இருந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆசி வழங்கினார். (சி)

## புதுக்குடியிருப்புப் பகுதியில் காலையும் மாலையும் தாக்குதல்

கிளிநொச்சி,ஏப்.19

முல்லைத்தீவு மாவட்டத்தில், புதுக்குடியிருப்பில் உள்ள கைவேலிப் பகுதியில் நேற்றுக்காலையும் மாலையும் விமானக் குண்டு வீச்சுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

விமானப்படையின் மிக்-27 ரக விமானங்கள் நேற்று முற்பகல் 10.30 மணியளவிலும் பிற்பகல் 4 மணியளவிலும் தாக்குதல்களை நடத்தின.

புதுக்குடியிருப்பையும் அதனை அண்டிய கைவேலிப் பகுதியிலும் இத்தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

மக்கள் குடியிருப்புகள் மீது இத்தாக்குதல்கள் நடத்தப்பட்டபோதும், மக்கள் பாதுகாப்பைத் தேடியதால் சேதம் ஏதும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. (அ-1-4)

## சங்கரி - சித்தார்த்தன் - பத்மநாபா அணி ஐக்கியப்பட்டு செயற்படுவதற்கு முடிவு

### ஏனைய தரப்புகளுக்கும் அழைப்பு

கொழும்பு, ஏப்ரல் 19

வீ.ஆனந்தசங்கரி தலைமையிலான தமிழர் விடுதலைக் கூட்டணி, த.சித்தார்த்தன் தலைமையிலான தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (புளொட்) மற்றும் ஈ.பி.ஆர்.எல்.எவ். (பத்மநாபா அணி) ஆகியன ஐக்கியப்பட்டுச் செயற்படத் தீர்மானித்திருப்பதாக அறிவித்திருக்கின்றன.

தங்களது நிலைப்பாட்டுடன் இணைந்து செயற்பட விரும்பும் அனைத்து அரசியல், சமூக சக்திகளுடனும் தாங்கள் ஐக்கியமாகச் செயற்ப்படத் தயார் என இந்த அமைப்புகளின் தலைவர்கள் கூட்டாக அறிவித்திருக்கின்றனர்.

இது தொடர்பாக புளொட் தலைவர் என்ற வகையில் த.சித்தார்த்தன், தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் என்ற வகையில் வீ.ஆனந்தசங்கரி, ஈ.பி.ஆர்.எல்.எவ். பொதுச்செயலாளர் என்ற வகையில் தி.சிறிதரன் ஆகியோர் ஒப்பமிட்டு கூட்டு அறிக்கை ஒன்றை நேற்று வெளியிட்டனர்.

இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பாக மேற்படி மூன்று கட்சிகளும் விடுக்கும் கூட்டறிக்கை என்ற தலைப்பில் அது அமைந்திருந்தது. அதன் முழு விவரம் வருமாறு:-

(05 ஆம் பக்கம் பார்க்க)

## ஏறாவூர் ஆற்றில் படகுகவிழ்ந்து மாணவி உட்பட 4பேர் பலி!

மட்டக்களப்பு, ஏப். 19

ஏறாவூர் பொலிஸ் பிரிவிலுள்ள சந்தன மடு ஆற்றில் படகு கவிழ்ந்ததில் மாணவியொருவர் உட்பட நான்குபேர் மரணமானார்கள்.

இவர்களில் மூவரின் சடலங்கள் நேற்று புதன்கிழமை மாலை பிரேத பரிசோதனையின் பொருட்டு ஏறாவூர் வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருந்தன.

இச்சம்பவத்தில் இராசரத்தினம் மகேஸ்வரி (வயது - 30), நான்கு பிள்ளைகளின் தாயாரான அகிலேசுபிள்ளை புஷ்பராணி (வயது - 42) மற்றும் சந்திவெளி வித்தியாலய மாணவி கணேசமூர்த்தி ரோபதி (வயது - 13) ஆகிய மூவரினதும் சடலங்களே மீட்கப்பட்டுள்ளன.

இம் மூவரும் திகலி வெட்டையில் சேனைப் பயிர் மற்றும் கால்நடை வளர்ப் (06 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# 75 ஆவது பிறந்தநாள் வாழ்த்து

19.04.2007

திரு சி. பாலசிங்கம்



இன்று தனது
எழுபத்தைந்தாவது
அகவையில்
கால்பதிக்கும்
எம் அன்பான அப்பா
நோய் நொடியின்றி
நூறாண்டு காலம்
வாழ
எல்லாம் வல்ல
இறைவனை
வேண்டுகின்றோம்.

(59775)

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

20, பீ.ஏ. தம்பி லேன்,
வண்ணார்பண்ணை.

## VACANCY

MEDIA RESOURCE AND TRAINING CENTRE
A joint venture of the
UNIVERSITY OF JAFFNA
and the
INSTITUTE FOR FURTHER EDUCATION FOR JOURNALISTS (FOJO), KALMAR, SWEDEN

Applications are invited from suitable candidates for the following post in the Media Resource and Training Centre (MRTC), University of Jaffna. Media Resource and Training Centre is a joint venture of the FOJO (Funded by Royal Danish, Swedish and Norwegian Foreign Offices) and the University of Jaffna.

**ADMINISTRATIVE AND FINANCIAL ASSISTANT**
**JOB DESCRIPTION**

The Administrative and Financial Assistant will assist the Director of the MRTC in all matters relating to financial and Office Administration.

**Qualifications:**
* University degree in Commerce or Management Studies.
* Good secretarial and inter personal skills.
* Computer skills in MS Office, particularly spreadsheets.
* Good written and spoken English.

Selected condidate will be given appointment for one year on contract. Application forms are available at the MRTC Office, 84, Jumma Mosque Lane, Jaffna. The completed application forms have to reach the Registrar, University of Jaffna, Thirunelvey, Jaffna on or before 04.05.2007.
Late applications willbe disqualified without intimation.

Registrar.
University of Jaffna,
17.04.2007

## மரண அறிவித்தல்கள்

### நவரத்தினம் கந்தையா

(கந்தையா அன் சன்ஸ் - உரிமையாளர் - ஊர்காவற்றுறை)



காரைநகர் களபூமியைப் பிறப்பிடமாகக் கொண்ட நவரத்தினம் கந்தையா 17.04.2007 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நவரத்தினம் - சிவகாமி தம்பதிகளின் இரண்டாவது மகனும், இராசமலரின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான முருகேசு, மார்க்கண்டு மற்றும் நடராசா ஆகியோரின் சகோதரனும் காலஞ் சென்ற முருகேசு மற்றும் தங்கம்மா தம்பதியரின் மருமகனும் தெய்வேந்திரம், புஸ்பராணி, தேவமணி, காலஞ்சென்ற சறோசா தேவி மற்றும் தவரஞ்சனா (ஆசிரியை), சந்திரவதனா, இராஜேந்திரம், திருவருப்பிரியா ஆகியோரின் அன்பு தந்தையும் தர்சினி, கர்ணன், சந்திரகுமார் ஆகியோரின் அன்பு மாமனும் அஜந்தினி, மதுராஜினி, மதுசன், தாட்சாயினி, சஞ்ஜெய், திவாஜினி, சுவிதா, ஜெயசிவராம் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.04.2007) வியாழக்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைநகர் தில்லை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'களபூமி'*
*பிள்ளையார் கோயில் வீதி,*
*காரைநகர்.*

தகவல்:
தெய்வேந்திரம் (மகன்).

(59762)

### செல்லப்பா கனகசபை



கோப்பாய் தெற்கு, வீரபத்திரர் கோயிலடியைப் பிறப்பிடமாகக் கொண்ட செல்லப்பா கனகசபை நேற்று (18.04.2007) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற உருத்திரகோசமங்கை மற்றும் சோதி, கனகம்மா, கமலம் ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.04.2007) வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் இரு பாலை இந்து மயானத்தில் தகனக்கிரியைக்காக எடுத்துச் செல் லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வீரபத்திரர் கோயிலடி,*
*கோப்பாய் தெற்கு,*
*கோப்பாய்.*

தகவல்:
வ. மார்க்கண்டு (மைத்துனர்.)

(59780)

10ம் 11ம் ஆண்டு
ICT மாணவர்களே!
உங்களுக்கான புதிய பிரிவுகள்
ஆரம்பமாகின்றன.
உடனே தொடர்பு
கொள்ளுங்கள்..



**CB Computer Academy**
Station Road, Kondavil. ☎:-021-4590291

*The Express Institute*
Irupalai, Kopay.

**O/L - 2007**

2ஆம் தடவை பரீட்சைக்கு
தோற்றுவோர்க்கான
**துரித மீட்டல் வகுப்பு**
ஏப்ரல் 21ஆம் தேதி
காலை 9 மணிக்கு ஆரம்பம்.

*The Express Institute*
Irupalai, Kopay.

## யந்திரபூசை ஆரம்பம்



*நவிண்டில் சுந்தர ஐயப்ப சுவாமி ஆலய கும்பாபிஷேக யந்திரபூசை புன்னாலைக் கட்டுவன் ஐயப்பசுவாமி ஆலயத்தில் நேற்று முதல் 9 நாள்கள் பகல் 10 மணிக்கு தாணுவாசு தேவகுருசுவாமியும் சபாரத்தினக்குருக்களும் நடத்தி வைப்பார்கள்.*

'சுவாமியே சரணம்'
ந.சுந்தரேஸ்வரசர்மா
நவிண்டில்.

## பாராட்டுகின்றோம்

யா/புனித சாள்ஸ்
மகா வித்தியாலய மாணவன்
செல்வன்

**அன்ரனி தானியேல்**



*அண்மையில் வெளியான க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் பத்துப்பாடங்களும் (6A, 2B, C, S) சித்தி பெற்றமையையிட்டு மனமுவந்து பாராட்டுவதுடன் வருங் காலங்களிலும் பரீட்சைகளில் சிறப்பான சித்திகள் பெற்று வளமோடு வாழ வாழ்த்துகின்றோம்.*

அற்புத அன்னை சனசமூக நிலைய இளைஞர் கழகம்,
நாவற்குழி.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
**இராமன் பத்தன்**

| ஆண்டவன் படைப்பில் | ஆண்டவன் மடியில் |
|---|---|
| 09-04-1938 | 19-04-2006 |



*எங்கள் குடும்ப ஒளிவிளக்கு மறைந்து ஓராண்டென்ன எத்தனை ஆண்டுகளானாலும் எங்கள் மனதை விட்டகலாது. எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.*

*12 ஆம் வட்டாரம்,*
*நெடுந்தீவு.*

நினைவுகளுடன்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்
நவரட்ணம் நல்லம்மா

ஜனனம்:
12.08.1917
மறைவு:
20.03.2007

கடந்த 20.03.2007 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவியின் சபீண்டீகரணக்கிரியைகள் இன்று (19.04.2007) வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிராத்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*பாடசாலை வீதி,*

குடும்பத்தினர்.

# அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

874
நீலம்

வெற்றி இலக்கங்கள்

மிதுனம்

**18 22 24 41**

**17-04-2007**

செல்லுபடியாகும் தொடர் இல. 4000000 - 4005907

ஜக்பொட் பரிசு ரூபா. 1,000,000/- வெல்லப்பட்டுள்ளது

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 127,293 | 10/- | 1,272,930/- |
| 2 இலககங்கள் | 11,598 | 20/- | 231,960/- |
| 1 இல. + லக்கினம் | 11,568 | 30/- | 347,040/- |
| 2 இல. + லக்கினம் | 1,112 | 100/ | 111,200/- |
| 3 இலக்கங்கள் | 325 | 500/ | 162,500/- |
| 3 இல. + லக்கினம் | 20 | 5,000/- | 100,000/- |
| 4 இலக்கங்கள் | - | 100,000/- | |
| 4 இல. + லக்கினம் | 1 | 1,000,000/- | 1,000,000/- |
| மொத்தம் | | | 3,225,630/- |
| முச்சக்கர வண்டிகளின் பெறுமதி | 5 | 204,700/- | 1,023,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 151,922 | | 4,249,130/- |

**இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 1,000,000/-**

தொடர் இல. 5852484 க்கு மேற்பட்ட சீட்டுகள் 2007 ஏப்ரல் 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
31, சென் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கரவண்டி வெற்றி பெறும் ஐந்து டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| காலி | 4002519-2-16 |
| நுவரெலியா | 4003333-6-05 |
| புத்தளம் | 4005829-4-11 |
| அம்பாறை | 4003458-1-07 |
| கேகாலை | 4005018-3-98 |

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர் திருமதி நாராயணன் இலட்சுமி

தோற்றம்: 23.05.1917
மறைவு: 20.03.2007

**'வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்'**

20.03.2007 மறைந்த எமது அன்பு அன்னையின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (19.04.2007) வியாழக்கிழமை நடைபெறும். அந்நிகழ்விலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு யாவ ரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**வராத்துப்பளை,**
**பருத்தித்துறை.**

*குடும்பத்தினர்.*

## 4 ஆம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு
15 - 01 - 1944



உதிர்வு
19 - 04 - 2003

திருமதி கந்தசாமி சிவநாயகி

எத்தனை செல்வங்கள் வந்தாலும்
எத்தனை இன்பங்கள் தந்தாலும்
அத்தனையும் உனக்கு நிகராகுமா?
இத்தனையும் இருந்து அரும் பெரும்
சொத்தாகிய அம்மா நீ இல்லையே!
தாங்குமா எம் இதயம் - தினம்
ஏங்குகின்றோம் உமை நினைத்து

*செங்குந்தா வீதி,*
*திருநெல்வேலி கிழக்கு,*
*திருநெல்வேலி.*

**உங்கள் பிரிவால் துயருறும்**
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் பாடநூல்களிலுள்ள தவறுகள்; திருத்தி அமைக்க அமைச்சர் இணக்கம்

யாழ்ப்பாணம்,ஏப்.19

கல்வி அமைச்சால் தமிழ் மாணவர்களுக்கு இலவசமாக வழங்கப்படும் தமிழ் பாடநூல்களில் உள்ள தவறுகளுக்கு உரிய திருத்தங்களை மேற்கொள்ளுமாறு கல்வி அமைச்சர் சுசில் பிறேம ஜயந்த கல்வி வெளியீட்டுத் திணைக்களத்திற்குப் பணிப்புரை வழங்குவதாக உறுதியளித்துள்ளார்.

கடந்த பல ஆண்டுகளாகத் தமிழ் மொழியில் கல்விகற்கும் மாணவர்களுக்கு கல்வி அமைச்சால் வழங்கப்பட்டு வரும் பாடநூல்களில் காணப்படும் எழுத் துப் பிழைகள், தவறான தகவல்கள், திரிப்பு செய்யப்பட்ட வரலாறுகள் போன் றவை தொடர்பாக வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் கல்வி அமைச்சரை நேரடியாகச் சந்தித்து எழுத்துமூலமாக முறைப்பாடு செய்தார். இதையடுத்தே அமைச்சர் மேற்படி உறுதியை வழங்கினார்.

இவ்விடயம் குறித்து தான் மிகவும் கவலையடைவதாகவும் சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகளை அழைத்து தவறுகளுக்கான காரணத்தைக் கேட்டறிவதோடு, எதிர்காலத்தில் இப்பாடவிதானங்களில் உரிய திருத்தங்களை மேற்கொள்ள பணிப்புரை விடுப்பதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (202)

## விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

யாழ்ப்பாணம், ஏப். 19

இலங்கை தொழில்நுட்பவியலாளர் சேவையில் சிவில்/ படவரைஞர் பதவிகளில் பயிலுநர் தரங்களுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கானப் பரீட்சைக் கும் சிவில் / படவரைஞர் வகுப்பு 2 பிரிவு 'ஆ' பதவிகளுக்கு நியமனம் வழங்குவதற்கான தகுதி காண் பரீட்சைக்கும் வடமாகாண பொதுச் சேவை ஆணைக்குழு விண்ணப்பங்கள் கோரியுள்ளது.

எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. மேலதிக விவரங்களை யாழ். பிராந்திய ஆணை யாளர் அலுவலகத்தில் பார்வையிடலாம். (202-75)

# கெடுபிடிகள் அதிகரித்து வருவதால் மணற்காட்டு மீனவர்கள் பாதிப்பு

உடுப்பிட்டி,ஏப்.19

மணற்காட்டுப் பிரதேசத்தில் கடற் றொழில் மேற்கொள்வதற்கு பல்வேறு கெடு பிடிகள் இடம்பெறுவதால் கடற்றொழிலாளர் பாதிப்படைவதாகத் தெரிவிக்கப்படுகின் றது.

பாஸ் பெற்றுக் கொள்வதற்காக அதிக நேரம் கரையில் செவிடவேண்டியுள்ளது. இதனால் தொழிலை மேற்கொள்வதற்கு குறைந்த அளவு நேரமே கிடைக்கின்றது என்று விசனம் தெரிவிக்கின்றனர்.

இப்பிரதேசத்தில் தற்போது கரை வலைத் தொழிலுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இத் தொழிலில் பெறப்படும் சூடை மீன்களைத் தெரிவு செய்வதற்கு ஆள்களை - பெண்களை இராணுவம் அனு மதிப்பதில்லை. கரை வலைத் தொழில் செய்வோர் தமக்குக் கிடைக்கும் மீன்களைத் தெரிவு செய்வதற்கு தமது குடும்ப உறுப்பினர் களையே அதிகம் பயன்படுத்துவர். தற்போது படையினர் அதற்குத் தடை வித்தித்துள்ள தால் தாம் பெரிதும் பாதிக்கப்படுவதாகக் கடற் றொழிலாளர் விசனம் தெரிவிக்கின்றனர்.

(202-155)

# யாழ். மாநகரசபைப் பிரதேசத்தில் அபிவிருத்திப் பணிகள் நிறுத்தம்

**கட்டடப்பொருள் தட்டுப்பாடு காரணம் என்கிறார் ஆணையாளர்**

யாழ்ப்பாணம்,ஏப்.19

யாழ். மாநகரசபைப் பிரதேசத்தில் வடிகால் புனரமைப்புத் தவிர்ந்த ஏனைய அபிவிருத்தித் திட்டங்கள் யாவும் நிறுத்தப்பட்டுள்ளன.

யாழ். மாநகர ஆணையாளர் மு.செ. சரவணபவ இதனைத் தெரிவித்தார்.

சிமெந்து விலையேற்றம் மற்றும் மணல் தட்டுப்பாடு ஆகிய காரணங்களால் இப்பணிகள் நிறுத்தப்பட்டுள்ளதாகவும் - அவர் கூறினார்.

குடாநாட்டிற்கான பிரதான தரைவழிப் பாதையான ஏ-9 பாதை மூடப்பட்டபின்னர் குடாநாட்டில் கட்டடப் பொருள்கள் விலை அதிகாரிப்பு, தட்டுப்பாடு மற்றும் மணல் கிடைக்காமை போன்ற காரணங்களால் மாநகரசபை மேற்கொண்டுவந்த அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் முற்றாகக் கைவிடப்பட்டிருக்கின்றன.

தற்போது வடிகால்களில் ஏற்பட்டுள்ள வெடிப்புக்கள் மட்டுமே சீர் செய்யப்பட்டுவருகின்றன - என்றும் அவர் கூறினார். (அ-1-4)

# களுவாஞ்சிக்குடியில் இளைஞர் சுட்டுக்கொலை

கொழும்பு,ஏப்.18

மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடி எருவில் கண்ணகி மகா வித்தியாலயத்தில் அமைந்துள்ள அகதி முகாமில் வைத்து நேற்றுமுன்தினம் பிற்பகல் இளைஞர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

கொக்கட்டிச் சோலையைச் சேர்ந்த சரவணமுத்து சந்திரசேகர் (வயது 31) என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

நேற்றுமுன்தினம் சுமார் 2 மணியளவில் அகதிமுகாமுக்குள் ஆயுததாரி ஒருவர் புகுந்து குறிப்பிட்ட இளைஞர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டார் என்று கூறப்பட்டது.

உயிரிழந்த இளைஞனின் சடலம் களுவாஞ்சிக்குடி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

(த-9)

# கரையோரப் பகுதிக்கு குழாய் நீர் விநியோகம்

யாழ்ப்பாணம், ஏப். 18

யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்ட கரையோரப் பகுதிகளில் இதுவரை நீர் விநியோகம் செய்யப்படாமல் உள்ள ஐந்து இடங்களுக்கும் விரைவில் குழாய்நீர் விநியோகம் செய்யப்படும் என்று யாழ். மாநகர சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

மாநகர சபைப் பகுதியில் உள்ள குழாய் நீர் விநியோகம் கிடைத்த சில பகுதிகளுக்கு ஏற்கனவே புதிதாக குழாய் நீர் விநியோகம் ஆரம்பிக்கப்பட்டு இருப்பது குறிப்பிடத்தக்கது.

அதேவேளை நீர் விநியோகம் செய்வதற்காக மாதாந்தம் சுமார் 6 லட்சம் ரூபா மாநகரசபையால் செலவிடப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (அ-1-4)

## கலந்துரையாடல்

யாழ். பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைப் பீடத்தில் இசை, நடனம், இசைக்கருவிகள் கற்பதற்கு நேர்முகப் பரீட்சையில் தோற்றி அனுமதி கிடைக்காத மாணவர் களுக்கான கலந்துரையாடல் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு இணுவில் திகழ் கல்வி நிலையத்தில் நடைபெறவுள்ளது.


## சமுதாய அரங்கப்பயிற்சி நெறி 2007

**Community Theatre Training**

1. செயல்திறன் அரங்க இயக்கம் அரங்கத்துறையில் ஈடுபடுவோர்களுக்கான அரங்கப்பயிற்சி ஒன்றை நடத்த உள்ளது இப் பயிற்சி நெறியில் அரங்கப்பயிற்சிகளும் கிராம அபிவிருத்தி செயற்திட்டங்களில் ஈடுபடுவதற்கான அடிப்படைப் பயிற்சிகளும் உள்ளடக்கப்படுகின்றன,
2. பயிற்சியினை சீராக முடித்துக் கொள்பவர்களுக்கு தொழில்ரீதியான வழிகாட்டல்கள் வழங்கப்படும்.
3. காலம் -3மாதம்

**வேண்டப்படும் தகைமைகள்:-**

1. G.C.E O/L , A/L தரத்தில் சித்தியடைந்திருத்தல்.
2. வயதெல்லை 20-30
3. நாடகம் சார் அனுபவம் / விருப்பம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்

ஆர்வம் / தகுதியுள்ளவர்கள் 23.04.2007 அன்று காலை 09மணி தொடக்கம் 3.30 மணி வரை உரிய ஆவணங்களுடன் எமது நிறுவனத்துக்கு நேரடியாக சமூகம் தரவும்

தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:

Active Theatre movement
செயல்திறன் அரங்க இயக்கம்,
"அருள்கம்" ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி


## கண்ணீர் அஞ்சலி

யாழ். பல்கலைக்கழக கலைப்பீட
ஆம் வருட நாடகமும் அரங்கியலும்
சிறப்புக்கலை மாணவியாகிய
யசிதாவின் அன்புச் சகோதரியான

**செல்வி சின்னத்தம்பி கவிதா**

அவர்கள் 16.04.2007 அன்று காலமானதையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

3 ஆம் வருடம்
நாடகமும் அரங்கியல் கலை மாணவர்கள்,
கலைப்பீடம், யாழ். பல்கலைக்கழகம்.

(59764)


**COMPUTER EXPRESS**

Institute of Information Technology

Head Office : 15, Sirambiyadi Lane, Off Stanly Rd, Jaffna.
Branch : 167, Kasthuriyar Rd, Jaffna.
TP No : 021 222 8250 , 0777 222 422

**மாபெரும் புலமைப்பரிசில் திட்டம் 2007**

**80% OFF**

| பாட நெறிகள் | | | |
|---|---|---|---|
| Diploma in computer Science | - 4மாதம் | [illegible] | 1,650 |
| Honours Diploma in Computer Science | - 5மாதம் | [illegible] | 2,100 |
| Diploma in Web Page Designing | - 4 மாதம் | [illegible] | 1,650 |
| Diploma in Graphic Designing | - 4 மாதம் | [illegible] | 1,650 |
| Diploma in Desk top Publishing | - 4 மாதம் | [illegible] | 1,450 |
| Diploma in Hard Ware Engineering | - 3 மாதம் | [illegible] | 1,450 |
| Accounting Package | - 3 மாதம் | [illegible] | 1,650 |
| Diploma in AutoCAD | - 3 மாதம் | [illegible] | 1,450 |
| MS Office | - 3 மாதம் | [illegible] | 1,000 |

**50% Off Advances Courses**

Diploma in Video Editing ~~[illegible]~~ 3250
Diploma in Multimedia ~~3500~~ 2750

வகுப்புக்கள் ஆரம்பம் :-
Batch I - 20/04/2007
Batch II - 21/04/2007
Batch III - 22/04/2007
Batch IV - 23/04/2007

கம்பியூட்டர் எக்ஸ்பிரஸ் ஆசிரியர் குழாமினால் வகுப்புக்கள் நடாத்தப்படும்.
சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வரையறுக்கப்படாத கணனிப் பயிற்சி


## நீங்காத இரண்டாம் ஆண்டு நினைவுகளில்...

தோற்றம் 10 . 09 . 1941



மறைவு 11 . 05 . 2005

**அமரர் நடராஜா கணேசராஜா**

*(Rtd. Laboartory Asst., Co - Operative Wholesale Establistiment, Rtd. Distillery / Warehouse Officer, State Distilleries Corporation)*

திதி: திருதியை 19.04.2007 வியாழக்கிழமை

ஆண்டு இரண்டு ஆனாலும்
ஆறாது உங்கள் பிரிவுத்துயர் அப்பா!
ஆயிரம் ஆயிரம் உறவுகள் இருப்பினும்
அப்பா - உங்களைப் போல் வருமா?
இறைவனிடம் தினம் வேண்டி நிற்கின்றோம் - அப்பா
மீண்டும் எம்முடன் பிறந்து வரவேண்டும் - என்று

உங்கள் பிரிவால் வாடும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரன்.

சண்டிலிப்பாய்மத்தி,
சண்டிலிப்பாய்.
(59703)

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியர்
திருமதி T.சிவகுமாரசர்மா
அவர்களின் அன்பு மாமி

**திருமதி ஞானாம்பிகை அம்மா குருசாமி ஐயர்**

அவர்கள் காலமானதையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் கழகம்,
கொக்குவில் இந்துக் கல்லூரி.

(59747)

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியை திருமதி
பவானி உதயகுமார் அவர்களின்
அன்புத் தந்தை

**அமரர் குட்டித்தம்பி திருநாவுக்கரசுநாயகம்**

அவர்களின் மறைவையொட்டி துயரடைந்திருக்கும் அவர்களுடைய குடும்பத்தினருக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மகளிர் கல்லூரி, மானிப்பாய். ஆசிரியர்கள்

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் நன்றி நவிலலும்



*அமரர் சரவணை பாலசுப்பிரமணியம்*

(ஓய்வு பெற்ற மேற்பார்வையாளர்-
யாழ். போதனா வைத்தியசாலை)
"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்-
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"

அன்னையின் மடியில் 05 ★ 10 ★ 1923
இறைவன் அடியில் 20 ★ 03 ★ 2007

எனது கணவரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும், தொலைபேசி, கடிதங்கள், துண்டுப் பிரசுரங்கள் மூலம் அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் [illegible] தியவர்களுக்கும் வைத்தியசாலையில் அன்புடன் கவனித்த வைத்தியர்கள், தாதிமார்கள், ஊழியர்கள் மற்றும் பல வகையிலும் உதவிகள் செய்த எமது உற்றார், உறவினர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (19.04.2007) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவாற்றுயருறும்:
திருமதி நவரட்ணம்
(மனைவி)

திருத்தணிகை,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.
(59768)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தவறிவிட்டது

கற்பகப்பிள்ளையார் கோவிலடி, உடுவில் கிழக்கு என்னும் முகவரியைச் சேர்ந்த காந்தி ஜயந்தினி என்பவரது தேசிய அ.அட்டை (767164360V), வி.ரே. அ.அட்டை (0906025461), வங்கிப்புத்தகம் (N.S.B) தொழில் அ.அட்டை (தெல்லிப்பழை வைத்தியசாலை) என்பன 13.04.2007 அன்று யாழ். நகரப் பகுதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் திரேசம்மா, 137, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். தொ.பே.: 0776687509. சன்மானம் வழங்கப்படும்.

## வீடு விற்பனைக்கு

கலைப்புலவர் வீதி, மணிக்கூட்டு றோட் யாழ்ப்பாணத்தில் சகல வசதிகளுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 95, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 4590031

## 9ஆம் ஆண்டு நீங்கா நினைவலைகள்



### திருமதி இராஜசேகரம் அரசரத்தினஅம்மாள்

*திதி: 19.04.2007*

| வையத்துள் | வானுலகுள் |
|---|---|
| 02.04.1912 | 28.04.1998 |

இறை தந்த கொடை எமக்கு
இன்றில்லை எம்மோடு
கண்ணீரால் அஞ்சலிப்போம்
உறவுகளாம் நாமிங்கு.

இல.9, றக்கா வீதி,
யாழ்ப்பாணம். (59568)

பிரிவால் துயருறும்
**குடும்பத்தினர்.**

## நன்றி நவிலல்



எங்கள் இல்லத் தலைவர்
அமரர் இரா.சுந்தரலிங்கத்தின்

மறைவுச் செய்தி கேட்டு எமது இல்லங்கள் தோறும் வந்து ஆறுதல் கூறியோர்க்கும் மற்றும் வானொலி, பத்திரிகை, தொலைபேசி, தந்தி மூலமாக அஞ்சலி செலுத்தியோர்க்கும் அன்னாரின் இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்ட பெரியோர், உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் மற்றும் பல வழிகளில் உதவியோர்க்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

திரு. திருமதி சுதர்சன் (மகன்/மருமகள்),
திரு. திருமதி செல்வவிநாயகன் (மகள்/மருமகன்),
மைத்துனர்கள்.
89/14, பஸல்ஸ் லேன், கொழும்பு - 06.

(சி-52273)

## அமரர்
## தில்லையம்பலவாணர் சம்பந்தன் இரங்கலுரை



**'LET ANOTHER MAN PRAISE THEE AND NOT THINE OWN MOUTH'**

என்கிறது ஒரு ஆங்கிலப் பழமொழி. ''அடுத்தவன் உன்னைப் புகழட்டும்; ஆனால் உன்னை உன் வாயால் புகழாதே'' என்பது அதன் கருத்து.

தன்னைத் தானே புகழாது அடுத்தவர்களால் புகழப்பட்ட ஒரு மனிதர்தான் **தில்லையம்பலவாணர் சம்பந்தன்.**

எங்கள் நிறுவனத்தில் நான்கு வருடங்களுக்கு மேல் பணியாற்றி அண்மையில் காலமான அன்பு மனிதர் இளவயதில் காலமானதையிட்டு மிக வருந்துகிறோம். அவர் நோய்வாய்பட்டு வைத்தியசாலையில் இருந்தபோது அவரது மனைவி பிள்ளை மற்றும் உற்றார், உறவினரைப் போல் நாமும் வேதனைப்பட்டோம். அவர் இறந்தபோது அதிர்ச்சியடைந்தோம். இறுதியாக சிகிச்சைக்காக இந்தியா செல்லுமுன்னரும் விரைவில் குணமடைந்து எமது நிறுவன சேவையில் இணைவதாக கூறிச் சென்றார். அது அவரது இறைநிலை பயணமென்பதை நாம் யாரும் உணரவில்லை.

புத்தூர் மேற்கில் பிறந்த அமரர் தில்லையம்பலவாணர் சம்பந்தன் ஆரம்பக் கல்வி முதல் தொழில்நுட்பக் கல்விவரை முன்னேற்றத்துடன் கல்வி கற்றவர். இளகிய மனம் கொண்டவர். இன்முகத்தோடு நேர்மையாக உழைத்தவர். அப்படிப்பட்ட ஒருவரை எம் நிறுவனம் முகாமையாளராகப் பெற்றதையிட்டுப் பெருமைப்பட்டோம்.

ஒரு சாதாரண ஊழியராக இணைந்து தனது திறமையாலும் ஆளுமையாலும் எம் நிறுவன முகாமையாளராக முன்னேறியவர்.

அன்பால் அனைத்தையும் ஆளலாம் என்று அருட்தந்தை வேதாத்திரி மஹரிஸி அவர்கள் சொன்னது போல் அமரரும் அன்பால் ஆட்சி செய்தார்.

அண்மையில் யாழ்ப்பாணத்தில் பொருள் தட்டுப்பாடு ஏற்பட்டபோது எங்கள் நிறுவனத்திலிருந்து அவர் மக்களுக்கு சேவை செய்தார்.

எமது நிறுவனத்தில் தொழில் செய்வது போலல்லாது மக்களின் தேவையறிந்து சேவை செய்யும் மனப்பாங்குடன் செயற்பட்டார்.

யாழ்ப்பாணத்தில் எமது நிறுவனம் திறமையுடன் செயற்பட்டதென்றால் அமரர் சம்பந்தன் திறமையுடனும் நேர்மையுடனும் ஏனைய ஊழியர்களுடன் அணியாக இயங்கியமையே காரணமாகும்.

சேவை மனப்பான்மையுடைய ஒருவர் எந்தப் பாத்திரத்தை ஏற்றும் மக்களுக்கு சேவை செய்யலாம். யாழ்ப்பாணத்தில் பொருள்கள் தட்டுப்பாடு ஏற்பட்டபொழுது கறுப்புச் சந்தைக்கு மத்தியில் நின்று நேர்மையுடன் குறியீட்டு விலையில் தட்டுப்பாடான பொருள்களின் தேவையறிந்து, தேவையுள்ளவர்களை இனம்கண்டு பங்கிட்டு விற்பனை செய்த எமது நிறுவனத்தின் முகாமையாளர் இன்று எம்மோடு இல்லை.

தனது குழந்தைக்கு தேவையான குழந்தை உணவுகளைக் கூட நிறுவன அதிபரின் அனுமதியுடனேயே எமது நிறுவனத்திலிருந்து வாங்கிச் சென்றார். அப்படிப்பட்ட ஒரு நல்ல மனிதரை இழந்து நாம் வேதனையடைகின்றோம்.

மறுபிறப்பென்று ஒன்றிருப்பின் அவர் எங்கள் சகோதரனாக மீண்டும் பிறக்க வேண்டும்.

சம்பந்தன் மறைந்துவிட்டார். அவர் மக்களுக்குச் செய்த சேவையும் எங்கள் நிறுவனத்திற்கு செய்த சேவையும் என்றும் மறைந்து விடாது.

அவரை எமது வாழ்நாளுள்ளவரை மறக்கமுடியாது.

அவரது மனைவி, பிள்ளை மற்றும் உற்றார், உறவினர் அனைவருக்கும் எமது அனுதாபத்தை கண்ணீரோடு தெரிவிக்கின்றோம்.

**த.குழந்தைவேல்,**
அதிபர், அன்னை நாகா பூட்சிற்றி, யாழ்ப்பாணம்.

(சி-52208)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும்
## நன்றி நவிலலும்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 05 • 04 • 1919 | ௨0 • 03 • 2007 |

கொற்றாவத்தை மலையந்தோட்டத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட

### அமரர் ஆழ்வார் கிருஷ்ணபிள்ளை

(59774)

**(ஓய்வுபெற்ற ஆசிரியர்)**

எமது நல்வாழ்வுக்காக இறுதிவரை அயராது உழைத்த எமது அன்புத் தெய்வம் அமரர் ஆழ்வார் கிருஷ்ணபிள்ளை அவர்களின் மரணச் செய்தி கேட்டு வந்து பலவழிகளிலும் உதவி புரிந்தவர்களுக்கும் வெளிநாடுகளிலிருந்தும் உள்நாட்டில் இருந்தும் அனுதாபச் செய்தி அனுப்பியவர்களுக்கும் அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத்தெரிவித்துக்கொள்வதுடன், இன்று (19.04.2007) வியாழக்கிழமை எமது இல்லத்தில் இடம்பெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொண்டு அவரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(59734)

மலையந்தோட்டம்,
கொற்றாவத்தை,
தகவல்:
ஜெகதீஸ்வரன் - இந்திரா (Swiss)

என்றும் உங்கள் நினைவாகவே வாழும்!
மனைவி, [illegible]
பேரப்பிள்ளை[illegible]

## 45ஆம் நாள் ஈரவிழிகளுடன்
## நினைவலைகள் !

நயினாதீவு, 5ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கச்சேரி கிழக்கு ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட

### கனகரெத்தினம் சுரேஸ்குமார்
### சுரேஸ்

அன்னக்கிளி
பல்பொருள் அழகுமாடம்



தோற்றம்
01.10.1980

மறைவு
04.03.2007

''எம் இனிய மகனே சுரேஸ்
எம் இல்லத்தில் ஒளிவிளக்காய் சுடர்விட்டாயே
உமது ஒ[illegible] சுடர் பிரகாசமாய் ஒளிக்க
காலனவன் அணைத்த தேனோ!

''அன்புடன் நாம் இருந்தோம் - அந்த அன்பு
காலனவனுக்குப் பொறுக்கவில்லையோ
உன் எதிர்காலம் சிறப்பாக அமைய
கனவுகள் நாம் கண்டோம்
எங்களிடம் இருந்து உமைப்பிரிக்க
இறைவனுக்கு ஏன் மனம் வந்ததோ
''ஐயா சுரேஸ்'' உங்கள் அன்பில் நாங்கள் இங்கே கதறியழ

அவனியில் எங்கே சென்றீரையா - சுரேஸ்
கனவுதான் கண்டதுபோல் காலனவன் கவர்ந்தானோ!
நிஜமாக நீங்கள் இல்லையா
நினைக்கவே மனம் பொங்குதடா - சுரேஸ்

''மகனே'' தாய்தந்தை கதறுகிறோம்
சகோதரர்கள் வெம்பியழுகின்றனரையா - சுரேஸ்
மைத்துனர், மருமக்கள், உற்றார், உறவினர்கள்
உன் பிரிவால் கதறுகிறார்கள் ஐயா
''நீங்கள் எங்கே சென்றீர்கள்
மீண்டும் எங்களிடம் வர இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

**அன்னாரது இறுதிக்கிரியைகளில் கலந்த அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவிப்பதோடு, இன்று (19.04.2007) வியாழக்கிழமை நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும்வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

இல.46, கச்சேரி கிழக்கு ஒழுங்கை,
கச்சேரியடி, யாழ்ப்பாணம். (59769) - **குடும்பத்தினர்.**

**(இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொ.பே., 222 3837, 222 9933 தொ.ந.: 222 9944

# திருத்தந்தையின் தரிசனமாவது திருந்தி நடக்க வழிசெய்யுமா?

இலங்கையில் மனித உரிமை மீறல்கள் மோசமாக மீறப்பட்டு வருகின்றமை இன்று சர்வதேச விவகாரமாகியிருக்கின்றது.

இக்குற்றச்சாட்டுகள் ஆயுதக்குழுக்கள் மற்றும் தடை செய்யப்பட்ட அமைப்புகள் போன்றவற்றுக்கு எதிராக மட்டுமல்லாமல், நாட்டின் அரசுக்கும் அதன் தலைமைக்கும் எதிராகவும் கூட பரவலாக முன்வைக்கப்பட்டு வருவதுதான் இங்கு முக்கிய பிரச்சினை.

அரசுப் படைகளின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களில் ஆட்கடத்தல்கள், அச்சுறுத்திக் கப்பம் அறவிடுதல், ஆட்கள் காணாமற் போகச் செய்தல், படுகொலை செய்யப்படல் என்று அராஜகங்கள் அளவுக்கு அதிகமாக நடக்கின்றன. இக்கொடூரங்களைத் தடுப்பதற்கு அரசுத் தரப்பு உருப்படியான நடவடிக்கைகளை எடுக்காமல் உதாசீனமாக நடந்துகொள்கின்றது என்ற குற்றச்சாட்டு ஒருபுறமிருக்க, மறுபுறம் அரசுப்படைகள், அவற்றின் கீழ் இயங்கும் துணைப்படைகள் போன்றவையும் இந்தக் கொடூரத்தை இழைக்கின்றன என்றும் அவற்றுக்கு அரசுத் தலைமையின் ஆசியும், அங்கீகாரமும் உண்டு என்றும் திடுக்கிடும் உண்மைகள் அம்பலப்படுத்தப்பட்டு வருகின்றன.

அரசுப் பின்புலத்தோடு அரங்கேறும் இக்கொடூரங்களை நேரடியாக அனுபவித்து வருகின்ற தமிழர்களுக்கு, இவற்றின் 'சூத்திரதாரிகள்' யார் என்பது நன்கு தெரியும்.

அதே சமயம்அமெரிக்காவைத் தளமாகக் கொண்டு இயங்கும் 'மனித உரிமைகள் கண்காணிப்பகம்', லண்டனைத் தளமாகக் கொண்டு செயற்படும் 'சர்வதேச மன்னிப்புச்சபை' மற்றும் 'ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழு' போன்றவை எல்லாம் கூட இந்த மனித உரிமை மீறல் கொடூரம் குறித்துத் தொடர்ந்து குரல் எழுப்பி வருகின்றன.

சட்ட ரீதியான - இறைமையுள்ள - அரசு என்று தன்னைக் கூறிக்கொள்ளும் இலங்கை அரசே, இந்த மனித உரிமை மீறல்களில் ஈடுபடுகின்றது என்ற உண்மையை உலகின் மனித உரிமைக் காவலர்கள் அம்பலப்படுத்தி வருகின்றனர்.

இந்த உண்மைகளை உலகுக்கு வெளிப்படுத்தும் உள்ளூர் ஊடகவியலாளர்கள் அச்சுறுத்தப்படுகின்றனர்.

திருகோணமலையில் ஐந்து அப்பாவி மாணவர்களின் படுகொலைகளின் பின்னணியை அம்பலப்படுத்திய குற்றத்துக்காக 'சுடர் ஒளி' யின் அப்பிரதேசச் செய்தியாளர் படுகொலை செய்யப்பட்டார். இப்படி இன்னும் பலப்பல.

நாட்டின் பிரதான எதிர்க்கட்சி இத்தகைய மோசமான உரிமை மீறல்கள் குறித்துக் குரல் எழுப்பும்போது, "உங்கள் கட்சி உறுப்பினர்கள் தொந்தரவுக்கு உள்ளாக்கப்படுகின்றார்களா? நீங்கள் ஏன் ஆரவாரம் செய்கின்றீர்கள்?" - என்று இடக்குக்கேள்வி எழுப்புகின்றனர் ஆட்சியாளர்கள்.

இவ்வாறு இலங்கை ஆட்சியாளர்களின் மனித உரிமை மீறல் அராஜகம் சர்வதேச மட்டத்தில் பறைசாற்றப்படும் இந்தச் சந்தர்ப்பத்தில்தான், உலகக் கிறிஸ்தவர்களின் ஒப்புயர்வற்ற திருத்தந்தை பதினெட்டாவது ஆசீர்வாதப்பர், நாளை இலங்கை அரசுத் தலைவரை நேரில் சந்தித்து அவருக்கு ஆசீர்வாதம் வழங்க இருக்கின்றார்.

இந்தச் சந்திப்புத் தொடர்பாக நியூயோர்க்கிலிருந்து மனித உரிமைகள் கண்காணிப்பகம் (Human Rights Watch) மற்றும் லண்டனிலிருந்து சர்வதேச மன்னிப்புச்சபை ஆகியன ஏற்கனவே திருத்தந்தைக்கு முக்கிய மடல்களை அனுப்பி வைத்திருக்கின்றன.

இலங்கை அரசுத் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவின் படைகளால் அண்மைக்காலத்தில் இழைக்கப்பட்டுவரும் மோசமான மனித உரிமை மீறல்களுக்கு பொதுமக்கள் மட்டுமல்லாமல் மதகுருமாரும் - அதுவும் திருத்தந்தையின் கத்தோலிக்க மத பீடத்தின் பங்குத்தந்தை கூட - இலக்காகியுள்ளார் என்ற உண்மையை மேற்படி சந்திப்புக்கு முன்னர் கடிதம் மூலம் திருத்தந்தைக்கு நினைவூட்டியிருக்கின்றது மனித உரிமைகள் கண்காணிப்பகம்.

இலங்கைக் கடற்படையின் சிரேஷ்ட அதிகாரிகளின் மிரட்டலுக்கு இலக்காகியிருந்த யாழ். அல்லைப்பிட்டிப் பிரதேச பங்குத்தந்தை வண. பிதா ஜிம் பிறவுண் அடிகளார், கடந்த ஓகஸ்டில் கடற்படையின் சோதனைச் சாவடியில் வழிமறிக்கப்பட்ட பின்னர் மர்மமான முறையில் காணாமற் போயிருக்கின்றமையையும் அந்த அமைப்பு திருத்தந்தைக்குச் சுட்டிக்காட்டியிருக்கின்றது.

இந்தச் சமயத்திலேயே இலங்கை ஜனாதிபதி - திருத்தந்தை சந்திப்பு நாளை வத்திக்கானில் இடம்பெறுகின்றது.

இச்சந்திப்பை ஒட்டி மனித உரிமைகள் கண்காணிப்பகம், திருத்தந்தையிடம் விடுத்திருக்கும் அதே வேண்டுகோளை ஈழத் தமிழர்கள் சார்பில் நாமும் திருத்தந்தையிடம் முன்வைக்க விழைகிறோம்.

கோரப்படுகொலை அராஜகத்துக்கு - தங்கு, தடையின்றி, சட்டக்கட்டுப்பாடு ஏதுமின்றி கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் ஆட்கடத்தல், அச்சுறுத்திக் கப்பம் பெறல், ஆட்களைக் காணாமற் போகச் செய்தல் போன்ற மனித உரிமை மீறல்களுக்கு - தமிழர் விரோதக் கொடூரங்களுக்கு - முற்றுப்புள்ளி வைக்க நடவடிக்கை எடுங்கள் என்று இலங்கை அதிபரிடம் வற்புறுத்துங்கள் என்றே திருத்தந்தையை நாம் இறைஞ்சுகின்றோம்.

*"நீங்கள் மற்றவர்களைத் தீர்க்கின்ற தீர்ப்பின்படியே நீங்களும் தீர்க்கபப்படுவீர்கள். நீங்கள் மற்றவர்களுக்கு அளக்கின்ற அளவின்படியே உங்களுக்கும் அளக்கப்படும்"* (மத்தேயு 7 ஆம் அதிகாரம், 2ஆம் வசனம்) என்ற உண்மையை இலங்கை அதிபருக்கு எடுத்துரையுங்கள் திருத்தந்தையே!

உங்கள் தரிசனமும், ஆசீர்வாதமும், நற்போதனைகளுமாவது இலங்கைத் தலைமையை நீதி செய்ய - நியாயமாக நடக்க - நல்வழியில் செயற்பட - ஆற்றுப்படுத்த வேண்டும் என்பதுதான் ஈழத் தமிழர்களின் இன்றைய ஆதங்கம், ஏக்கம், எதிர்பார்ப்பு எல்லாம்.

# கிழக்கில் மக்களை 3 கட்டங்களில் மீளக்குடியமர்த்த அரசு தீர்மானம்

## ஜூலை இறுதிக்குள் செயற்படுத்த கோத்தபாய உத்தரவு

கொழும்பு, ஏப். 19

மட்டக்களப்பு புலிகள் கட்டுப்பாட்டுப்பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்து அரச கட்டுப்பாட்டுப்பகுதிகளில் அகதி முகாம்களில் வாழுகின்ற மக்களை ஜூலை 30 ஆம் திகதிக்கு முன்பாக அவர்களின் சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்த அரசு நேற்றுத் தீர்மானம் எடுத்துள்ளது.

இது தொடர்பான கூட்டம் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் தலைமையில் நேற்று கொழும்பில் இடம்பெற்றது. இக்கூட்டத்திலேயே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டது.

இம்மக்களை மூன்று கட்டங்களாகக் குடியமர்த்த இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. முதலாவதாக வெல்லாவெளிப் பிரதேச செயலாளர் பிரிவிலும் இரண்டாவதாக பட்டிப்பளை பிரதேச செயலகப் பிரிவிலும் மூன்றாவதாக வவுணதீவு, செங்கலடி மற்றும் கிரான் ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளிலும் குடியமர்த்த இக்கூட்டத்தில் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மே மாதம் 10 ஆம் திகதி ஏ - 5 பாதையைப் புனரமைக்கவும் இம்மாதம் 22ஆம் திகதி இது தொடர்பாக கூட்டம் ஒன்றை மட்டக்களப்பு கச்சேரியில் நடத்தவும் இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஜூலை மாதம் 30 ஆம் திகதிக்கு முன் மீளக்குடியமர்த்தப்படும் பகுதிகளில் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளும் நிறைவுசெய்யப்படவேண்டும் என்று கோத்தபாய ராஜபக்ஷ இக்கூட்டத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

இக்கூட்டத்தில் அமைச்சர்கள் அமீர் அலி, ரிசாத் பதியுதீன், மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் மற்றும் திணைக்கள அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஏப்.16

புனித யாத்திரை தலமான புங்குடுதீவு அந்தோனி முனீந்திரர் ஆலய உயர் திருவிழா எதிர்வரும் 22 ஆம் திகதி ஞாயிற் றுக்கிழமை இடம்பெறவுள்ளது.

காலை 7 மணிக்கு இசைவேள்வி, கூட்டு வழிபாடு என்பன இடம்பெற்று 8 மணிக்கு காணிக்கைப் பவனி நடைபெறும்.

தொடர்ந்து 8.30 மணிக்கு திருவிழா திருப்பலியும் 9.30 மணிக்கு நாதஸ்வரகான ஆராதனையுடன் அந்தோனி முனீந்திரனின் ஊர்மனையூடான தேர்ப்பவனியும் 10.30 மணிக்கு பக்தர்களுக்கு அருளாசி வழங்கலும் நண்பகல் 12 மணிக்கு அன்ன தானமும் இடம்பெறவுள்ளன. (203)

* * *

அரியாலை, ஏப்.16

நீர்வேலி கந்தசாமி ஆலயத்தின் வருடாந்தத் திருவிழா நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

* * *

கரவெட்டி, ஏப்.16

வல்வை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா எதிர்வரும் புதன்கிழமை (18.04.2007) கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 19 தினங்கள் நடைபெறவுள்ளது.

தேர்த்திருவிழா மே மாதம் முதலாம் திகதியும் தீர்த்தத் திருவிழா மறுநாள் ஊறணி தீர்த்தக் கரையிலும் நடைபெறும். (70)

# தமிழர்களின் அவலக் குரலுக்கு சர்வதேசம் செவிசாய்க்க வேண்டும்

## தமிழ் மாணவர் ஒன்றியம் அறிக்கை

சர்வதேசம் தனது அலட்சியப் போக்கை நீடிக்காது, தமிழர்களின் அவலக் குரல்களுக்குச் செவிசாய்க்கவேண்டும். அவ்வாறின்றி அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கு துணைபோகுமானால், அது தமிழ் மக்களுக்கு இழைக்கப்படும் பெரும் துரோகமாகவே அமையும்.

இவ்வாறு தமிழ் மாணவர் ஒன்றியத்தின் யாழ். மாவட்டப் பிரிவு விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

குடாநாட்டில் இளம் சந்ததியினர் பெரும் எண்ணிக்கையில் திட்டமிட்டு அழிக்கப்படுகின்றனர். ஆனால், அத்தகைய அநீதிகள் வெளி உலகத்திற்குத் தெரியாதவாறு அரசினால் திட்டமிட்டு வியூகங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

தமிழ் மக்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளை எடுத்துச் சொல்லி தடுத்து நிறுத்துவதற்கு உதவும் பொறுப்பு ஒவ்வொரு தமிழ் அதிகாரிகளுக்கும் உண்டு.

சமூக, சமயப் பெரியார்களும் அரச அதிகாரிகளும் மக்கள் அனுபவிக்கும் கஷ்டங்களை எடுத்துச் சொல்லவும் - தயங்குகின்றனர். இந்நிலை மாறுவதற்கும் சர்வதேசம் உதவலாம் - என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் தமிழ் பேசும் மக்களின் மனித கௌரவத்தினை மதித்து நடக்குமாறு மாணவர்கள் சார்பாகப் படையினரிடம் வேண்டுகிறோம். - என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## போருக்கு அழைப்பு விடுத்து கொழும்பில் சுவரொட்டிகள்

'யுத்தத்திற்குத் தயாராகுங்கள்' என்று யுத்தத்துக்கு அழைப்பு விடுக்கும் வாசகங்கள் அடங்கிய சுவரொட்டிகள் நேற்று கொழும்பு நகர வீதிகளெங்கும் ஒட்டப்பட்டிருந்தன.

'கலாசாரத்துக்காகப் போராடும் முன்னணி' என்ற புதிய அமைப்பு ஒன்றின் பெயரில் இந்தச் சுவரொட்டிகள் காணப்பட்டன. (சி)

## சடலம் மீட்பு

ஏழாலை, ஏப். 18

ஏழாலை மத்தியில் வயல் கிணற்றிலிருந்து நேற்று (17.04.2007) குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

அதே இடத்தைச் சேர்ந்த பேரம்பலம் தங்கராசா (வயது 58) என்பவரின் சடலமே இவ்வாறு மீட்கப்பட்டது.

கடந்த திங்கட்கிழமை (16.04.2007) இரவு வயலுக்குச் சென்றவர் வீடு திரும்பவில்லை. இதையடுத்து குடும்பத்தவர்கள் நேற்று வயலுக்கு சென்று கிணற்றிலிருந்து சடலத்தை மீட்டுள்ளனர்.

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஏப். 18

யாழ். பல்கலைக்கழக இராமநாதன் நுண் கலைப் பீடத்தில் இசை, நடனம், இசைக்கருவிகள் கற்பதற்கு நேர்முகப் பரீட்சையில் தோற்றி அனுமதி கிடைக்காத மாணவர்களுக்கான கலந்துரையாடல் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு இணுவில் திகழ் கல்வி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

## அரச ஊழியர்களுக்கு சனியன்று பயண ஏற்பாடு

யாழ். மாவட்ட செயலகத்தில் பதிவு செய்த பிற மாவட்ட அரச ஊழியர்களுக்கான பயண ஏற்பாடு நாளை மறுதினம் சனிக்கிழமை செய்யப்பட்டுள்ளதாக அரச அதிபர் தெரிவித்தார்.

அன்றைய தினம் காலை 7 மணிக்கு பயண ஏற்பாடுகளுடன் அவர்களை ரயில் நிலையச் சந்திக்கு வருமாறு அரச அதிபர் கேட்டுள்ளார். (அ-1)

## நாகர்கோவிலில் ஒருவர் சுட்டுக்கொலை

நாகர்கோவிலில் படையினரின் முன்னரங்கக் காவலரணுக்குள் பிரவேசிக்க முற்பட்டார் எனக் கூறப்படும்நபர் ஒருவர்படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்ததாக தேசிய பாதுகாப்பு ஊடகநிலையம் தெரிவித்திருக்கிறது.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை 6.10 மணியளவில் இடம்பெற்றுள்ளது. குறிப்பிட்ட நபர் படையினரின் முன்னரங்கக் காவலரணுக்குள் அத்துமீறி நுழைந்தார் என்றும், இவ்வாறு நுழைந்தவர் விடுதலைப்புலி உறுப்பினர் என்றும், இவர் மீது படையினர் துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்டனர் என்றும் ஊடக மத்திய நிலையம் தெரிவித்தது. (சி)

# சங்கரி - சித்தார்த்தன்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எமது மக்களின் அவல நிலையையும், வன்முறைக் கலாசாரத்தையும், ஏற்பட்டுவரும் அழிவுகளையும் கருத்திற்கெடுத்து, இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வை எய்துவதை அடிப்படை இலக்காகக் கொண்டு முதற்படியாக தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழீழ மக்கள் விடுதலைக்கழகம், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (பத்மநாபா)ஆகிய மூன்று கட்சிகளும் ஐக்கியப்பட்டுச் செயற்பட்டு வருகின்றோம்.

இலங்கையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பது தொடர்பாக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட அனைத்துக் கட்சிகளின் பிரதிநிதிகள் குழுவின் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண அடிப்படையான சில ஆலோசனைகளை முன்வைத்துள்ளார்.

அதேவேளை, தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் ஆனந்தசங்கரி இந்திய அமைப்பு முறையில் அரசியல் தீர்வு எட்டப்படவேண்டும் என்பதை நீண்டகாலமாக வலியுறுத்தி வருகின்றார். தமிழீழ மக்கள் விடுதலை கழகத்தின் தலைவர் த.சித்தார்த்தன் சர்வகட்சிக் குழுவின் முன்னால் நேரில் சமூகமளித்து சமஷ்டி முறையிலான தீர்வினை வலியுறுத்தினார்.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (பத்மநாபா) ஒரு விரிவான அரசியல் தீர்வுத் திட்டத்தை அனைத்துக் கட்சிக்குழுவிடம் சமர்ப்பித்துள்ளது. மேற்படி யோசனைகள் இனப்பிரச்சினை தீர்வு தொடர்பான, அதிகாரப் பகிர்ந்தளிப்பு தொடர்பான கலந்துரையாடல்களை - செயற்பாடுகளை - மேலும் செழுமைப் படுத்திச்செல்ல அடிப்படைகளாக அமையும்.

### சமஷ்டி முறையில் அதிகாரப் பகிர்வு

இவற்றை அடிப்படையாகக் கொண்டு அரசியல் தீர்வுக்கான முன்னெடுப்புகள் தீவிரப்படுத்தப்பட வேண்டும் என்பதே எமது கோரிக்கையாகும்.

எம்மைப் பொறுத்தவரை 60 ஆண்டுகளாக நீடித்து நிலவும் இப்பிரச்சினைக்கு தற்போதைய தருணத்தில் நிரந்தரத் தீர்வு காண்பதற்கான செயற்பாடுகள் துரிதப்படுத்தப்பட வேண்டும். மூன்று தசாப்த யுத்தம் மற்றும் வன்முறைகளாலும் உயிரிழப்புகள், சொத்து அழிவுகளாலும் மக்கள் மிகவும் களைப்படைந்துவிட்டனர்.

அன்றாட அவலங்கள் தொடர்பான எமது அக்கறையுடன் இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வொன்றை எட்டுவதற்கே அரசு முன்னுரிமை அளிக்க வேண்டும். ஜனநாயகத்தையும், சமாதானத்தையும், அமைதியை [illegible] தமிழ் மக்களின் [illegible] இதுதான். சமூகத்தின் பல்வேறு மட்டங்களிலும் நிரந்தரமாக நிம்மதியாக சொந்த இடங்களில் வாழ்வதற்கான பிரதிபலிப்புகள் காணப்படுகின்றன.

சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்ந்தளிப்புக்கு ஏற்புடையதாக நாட்டின் அரசமைப்பில் தீவிரமான மாற்றங்கள் அவசியமானதாகும். 'சமஷ்டி' என்ற பதம் யாப்பில் இடம்பெறாவிட்டாலும் அந்த உணர்வின் அடிப்படையில் இந்திய முறையிலான அதிகாரப் பகிர்ந்தளிப்பு மேற்கொள்ளப்படுவது சகல தரப்பினராலும் ஏற்றுக்கொள்ளப்படக் கூடிய ஒன்றாகும்.

### வடக்கு - கிழக்கு இணைந்த நிர்வாகம்

சர்ச்சைக்குரியதாக்கப்பட்ட வடக்கு - கிழக்கு மாகாண இணைப்பைப் பற்றி எமது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்த விரும்புகின்றோம். ஏனைய பிரதேசங்களுடன் ஒப்பிடுகையில் வடக்கு - கிழக்கில் வாழுகின்ற மக்களே பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளமையால் இப்பகுதி மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு நியாயமான தீர்வை இணைந்த வடக்கு - கிழக்கு நிர்வாகத்தின் மூலமே காணமுடியும் என உறுதியாக நம்புகின்றோம்.

யுத்தம் உருவெடுத்து மக்கள் இடம்பெயர்வதற்கு முன்னர் வாழ்ந்த பகுதிகளில் அவர்கள் இன,மத பேதமின்றி மீள் குடியமரவும் இம்முறை வழியேற்படுத்தும். இப்பகுதியில் வாழும் சமூகங்களின் பாதுகாப்பு, வாழ்விடம் தொடர்பான அம்சங்களைக் கவனத்தில் எடுத்து ஒரு நிரந்தரத் தீர்வு காணப்பட வேண்டும் என்பதில் உறுதியாகவுள்ளோம்.

நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் வாழும்- எண்ணிக்கையில் சிறுபான்மையான - தேசிய சமூகங்கள் அந்தந்தப் பிரதேசங்களில் அவர்களுடைய அபிலாஷைகள், உரிமைகள் மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்தக் கூடிய வகையில் அரசமைப்பில் ஏற்பாடு செய்யப்பட வேண்டும். நாட்டின் எப்பகுதியிலும் இலங்கையின் சகல இன மக்களும் சம உரிமையுடன் வாழ்வதற்கான உத்தரவாதம் உறுதிசெய்யப்பட வேண்டும்.

இலங்கை பல்லின, பல்மத, பல்மொழி மற்றும் பல் கலாசாரங்களைக் கொண்ட நாடாகவும் இலங்கையின் இறையாண்மைக்குள் ஆட்சி, அதிகார அங்கங்களான மத்திய மாநில அரசியல் நிர்வாகக் கட்டமைப்புகளில் இன சமூகங்களின் விகிதாசாரம் கருத்திற்கெடுக்கப்பட்டு பிரதிநிதித்துவங்களோ, நியமனங்களோ மேற்கொள்ளப்பட வேண்டும். தேர்தல் சீர்திருத்த ஏற்பாடுகளிலும் இந்த விடயம் பிரதிபலிக்க வேண்டும்.

அதிகாரப் பகிர்ந்தளிப்புச் செயன்முறையினூடாகவே நாம் ஐக்கிய இலங்கையை - சுபீட்சமான எதிர்காலத்தை நோக்கி - கட்டியெழுப்ப முடியும்.

எமது இந்த நிலைப்பாட்டுடன் இணைந்து செயற்பட விரும்பும் அனைத்து அரசியல் சமூக சக்திகளுடன் நாம் ஐக்கியமாகச் செயற்படத் தயாராக இருக்கின்றோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம். - என்று உள்ளது. (சி)

## நாளை

சித்திரை - 07
வெள்ளிக்கிழமை
20.04.2007
திதி: திருதியை
முற்பகல் : 10.56
நட்சத்திரம்: கார்த்திகை
முற்பகல் : 07.43
சதுர்த்தி விரதம்
சுபநேரம் : 06.02 - 07.32
ராகுகாலம் : 10.32 - 12.02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரவீந்திரநாத் விவகாரம்: ஐ. நா. கவனமெடுக்கும்

## குடும்பத்தினரின் கோரிக்கை ஏற்பு

கொழும்பு, ஏப். 19

கிழக்கு பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் எஸ். ரவீந்திரநாத் காணாமற்போயுள்ளமை தொடர்பாக அவரது குடும்பத்தினர் செய்த முறைப்பாட்டுக்கு ஐ. நா. அமைப்பு பதில் அளித்திருக்கிறது.

பேராசிரியர் எஸ். ரவீந்திரநாத் கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் 15ஆம் திகதி கொழும்பில் வைத்து காணாமல் போயிருந்தார். இருந்தபோதிலும் இது தொடர்பாக தகவல்கள் எவையும் வெளியாகாத நிலையில் அவரது குடும்பத்தினர் ஐ. நா. சபையின் மனித உரிமைகளுக்கான ஆணையாளர் லூயிஸ் ஆர்பரின் கவனத்திற்குக் கொண்டுவந்தனர்.

இந்நிலையில் இந்த விடயம் தொடர்பாக தாம் கூடிய கவனம் எடுப்பதாக ஐ. நா. ஆணைக்குழு ரவீந்திரநாத்தின் குடும்பத்தினருக்குத் தெரியப்படுத்தியிருக்கிறது. (சி)

## அரியாலையில் சிப்பாய் தற்கொலை

அரியாலையில் அமைந்துள்ள 514 ஆவது படையணித் தளத்தில் பணி புரிந்த சிப்பாய் ஒருவர் நேற்றுக்காலை 11.30 மணியளவில் சுட்டுத்தற்கொலை செய்துகொண்டார்.

குடும்பத்தவரான எஸ்.சமன்குமார (வயது 30) என்பவரே இவ்வாறு தற்கொலை செய்தவராவார்.

சம்பவ இடத்துக்குச் சென்ற யாழ். மேலதிக நீதிவான் திருமதி எஸ். இளங்கோவன் விசாரணைகளை நடத்தினார்.

தற்கொலைக்கான காரணம் விசாரணையின் போது தெரியவரவில்லை. சடலத்தை கொழும்பு சட்ட வைத்திய அதிகாரி பிரேத பரிசோதனை செய்த பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கும் படி நீதிவான் உத்தரவிட்டார். (அ-1)

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து 19.04.2007



ஸ்ரீகரன் - கிருபாநந்தி தம்பதியரின் ஏக புத்திரி செல்வி

**பிரணவி**

தனது முதலாவது பிறந்ததினத்தை நயினாதீவில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் இன்று (19.04.2007) வியாழக்கிழமை வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார். அவரை பல்கலையும் பெற்று பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

5ஆம் வட்டாரம், நயினாதீவு. (59772) வாழ்த்துவோர்: விஸ்வநாதன் குடும்பத்தினர்.

---

**கோண்டாவில் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ.து)**

**இரண்டு சில்லு உழவு இயந்திரங்கள் (லான்மாஸ்ரர்) விற்பனைக்குண்டு**

எமது சங்கத்திற்கு சொந்தமான குபாட்டா மற்றும் றெட் லான் மாஸ்ரர்கள் விற்பனைக்குண்டு. கொள்வனவு செய்ய விரும்புவோர் வேலை நாள்களில் சங்கக் காரியாலயத்தில் பார்வையிடுவதுடன் கேள்விப்பத்திரங்களை எதிர்வரும் 05.05.2007ஆம் திகதிக்கு முன்னதாக கடிதமூலம் விண்ணப்பிக்கலாம்.

குறிப்பு:- 1) றெட் - லான்மாஸ்ரர் பெட்டியுடன்
2) குபாட்டா - லான்மாஸ்ரர் மட்டும். (பெட்டி இல்லை)

விண்ணப்பிக்கும் முகவரி:

**பொது முகாமையாளர்,**
ப.தெ.வ.அ.கூ.சங்கம்,
கே.கே.எஸ். வீதி, தாவடிச் சந்தி, கோண்டாவில்.

(சி.52272)

---

**யாழ்ப்பாணக் கல்லூரி**
**2009 - உயர்தர வகுப்புக்கு மாணவர்களைச் சேர்த்தல்**

தூர இடத்து மாணவர்கள் உயர்தர வகுப்புக் கல்வியைத் தொடர

1) விடுதி வசதிகள்
2) கல்லூரியிலேயே விசேட வகுப்புகள் சிறப்பு ஆசிரிய அணியினால் வழங்கப்படும்.
3) நூல் நிலைய வசதிகள்.

ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

அண்மையில் வெளிவந்த கல்விப் பொதுத்தராதரப் பரீட்சையில் பிரதான பாடங்களில் குறைந்தது 4A யும் அதற்கு மேற்பட்ட பெறுபேறுகளையும் கொண்ட மாணவர்கள் விண்ணப்பிக்கலாம்.

குறிப்பு :- 2007 மே மாதம் முதலாம் திகதியன்று 18 வயதுக்குட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

**விண்ணப்ப முடிவு திகதி :- 26.04.2007.**

(சி.52282) அதிபர்.

## மரண அறிவித்தல்

### வேலன் மாணிக்கம்



வளாக வீதி, கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலன் மாணிக்கம் அவர்கள் நேற்று (18.04.2007) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலன் - நாகி தம்பதியரின் அன்பு மகனும் நாகம்மாவின் அன்புக் கணவரும் இராசரத்தினம், தியாகராஜா (ஓய்வுபெற்ற மக்கள் வங்கி முகாமையாளர், மோதர), சுந்தரலிங்கம் (வெளிநாட்டு வர்த்தக அமைச்சு), தவமணிதேவி, சிவபாதம் (லண்டன்), இராசு (ஓமான்) ஆகியோரின் அன்புத் தந்தையும் பார்வதி, கோமதி, குளோரி, துரைசிங்கம் (ஓய்வுபெற்ற இ.போ.ச உத்தியோகத்தர், யாழ்ப்பாணம்), வசந்தாதேவி ஆகியோரின் அன்பு மாமனும் யோகராசா, சாந்தினிதேவி, ரவீந்திரன் (ஜேர்மனி), இராசேந்திரன் (சுவிஸ்), சந்திரன் (லண்டன்), சுரேந்திரன் (சுவிஸ்), சுஜாதா (பிரான்ஸ்), திலீபன் (கனடா), காண்டீபன் (கனடா), கீதா, ஜான்ஷன், ரமணன் (கொழும்பு), ரஜித்காந், ஜீவகாந், இந்துயாழினி, சுமங்கல்யா, ஹர்ஸ்வீனா, டிலானி, ஷஜனிக்கா, டேவிஷன், சமந்தா ஆகியோரின் அன்புப் பேரனும் கஜபாலினி, கார்த்திக், கலிஸ்ரன், விதுர்ஷனா, பிரியங்கன், பவித், அபிராமி, அஷ்வின், நிஷாரிக்கா, திவ்யன், நீலகி, நிகிஷா ஆகியோரின் அன்புப் பூட்டனும் நிதுரனின் கொள்ளுப்பாட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.04.2007) வியாழக்கிழமை நண்பகல் 12மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வளாக வீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (59782) தகவல்: க.துரைசிங்கம் (மருமகன்).

## படகு அகதிகளுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்றுக்குடியமர்த்தப்படுவர்.

அதேபோன்று - ஹெய்ட்டியிலிருந்து அமெரிக்காவுக்கு அகதி அந்தஸ்துக் கோரிச் சென்ற கியூபாவாசிகளை ஆஸ்திரேலியா ஏற்றுக்கொள்ள உள்ளது.

ஆஸ்திரேலியாவில் விரைவில் நடைபெற இருக்கும் தேர்தலில், 'நவ்று' விசாரணை முக்கிய பிரச்சினையாக எடுத்துக்கொண்ட சவேர்டிங்கட்சி அரசுக்குத் தோல்வி ஏற்படாமல் தடுக்கும் உள்நோக்கத்துடனேயே அமெரிக்கா ஆஸ்திரேலியா ஒப்பந்தம் திடுதிப்பென கைச் சாத்தானதாக அரசியல் அவதானிகள் தெரிவித்தனர்.

அகதிகளைப் பரிமாறிக்கொள்ளும் புதிய நடைமுறை முற்றிலும் அரசியல் நோக்கம் கொண்டது என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை - இந்த ஏற்பாடு அகதிப் பரிமாற்றத்துக்கு நிரந்தரமாக வசதி செய்ய மாட்டாது என்றும் அவதானிகள் தெரிவித்தனர்.

இவ்வருடம் பெப்ரவரி இறுதியில் இந்தோனேஷியாவில் இருந்து படகு அகதிகளாக ஆஸ்திரேலியா நோக்கிச் சென்ற 83 இலங்கைத் தமிழர்கள் வழிமறிக்கப்பட்டு முதலில் கிறிஸ்மஸ் தீவில் தங்கவைக்கப்பட்டு இப்போது 'நவ்று' தீவில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

அந்த விசாரணையின் போது, அகதி அந்தஸ்துக் கோரிச் சென்ற மாணவன் ஒருவன் பின்வருமாறு விசாரணையின் போது தெரிவித்தார்.

கடந்த வருடத்தில் திருகோணமலையில், மாணவர்களான எனது நண்பர்கள் ஐவர், இலங்கையில் விசேட அதிரடிப் படையினரால் ஒரே இரவில் கர்ண கொடூரமாகக் கொலைசெய்யப்பட்டனர்.

அதன் பின்னர் அங்கு இருப்பது எனது உயிருக்கு ஆபத்தென நினைத்து நான் முதலில் கொழும்பு வந்தேன் - என்றார். (அ)

## ஏறாவூர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பில் ஈடுபட்டிருக்கும் உறவினரைப் பார்ப்பதற்கு படகில் பயணம் சென்றபோதே படகு கவிழ்ந்து மரணமடைந்துள்ளனர் என உயிரிழந்தோரின் உறவினர்கள் ஏறாவூர் பொலிஸில் வாக்குமூலம் தெரிவித்துள்ளனர்.

படகை ஓட்டிச் சென்றவர் எனக் கூறப்படும் சித்தாண்டிப் பிரதேசத்தைச் சேர்ந்தவரின் சடலம் மீட்கப்படவில்லை. இவரது சடலத்தினை மீட்கும் பணியில் பிரதேசவாசிகள் தொடர்ந்தும் ஈடுபட்டு வருகின்றனர். ஈடுபட்டிருந்தனர். (சி)

---

**THE ROYAL COLLEGE OF JAFFNA**

சுலபமான முறையில் ஆங்கிலத்தில் கதைக்கப் பயில By : விக்கினேஸ்வரன் ஆச்சாரி,
426 (302), K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.
பிளாக் வீதி, சங்கானை.
"THE ROYAL IS THE BEST"

---

**தவறிவிட்டது**

பொன்னையா விக்கினேஸ்வரன் என்பவரது தேசிய அடையாள அட்டை (இல. 680794472V) கல்வியங்காட்டுப் பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஆடியபாத வீதியிலுள்ள இராமசாமி வைத்தியசாலையில் ஒப்படைத்து உதவவும்.

---

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு கப்பல் மூலமாகவோ அல்லது விமானம் மூலமாகவோ உடனுக்குடன் உங்கள் பொதிகள் அனுப்பி வைக்கப்படும். மொத்த வியாபாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும். கிளியரின்ஸ் இல்லாத பொருள்களுக்கு M.O.D.பெற்று உத்தரவாதத்துடன் உடன் அனுப்பி வைக்கப்படும்.

தொடர்பு: **EURO GROUPS**
0773846998, 0114542190.

---

**அவசர கலந்துரையாடல்**

எமது சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட உழவு இயந்திர உரிமையாளர்கள் அனைவரும் இன்று (19.04.2007) வியாழக்கிழமை உழவு இயந்திரத்தின் நடப்பு வருடத்திற்குரிய அனுமதிப்பத்திரங்களுடனும், அதன் போட்டோ பிரதிகளுடனும் மு.ப11மணிக்கு தவறாது காரியாலயத்துக்கு சமுகம் தரவும்.

வடமராட்சி கிழக்கு உழவு
இயந்திர உரிமையாளர் சங்கம், நிர்வாகம்.
குடத்தனை. (59784)

---

**விற்பனைக்கு உண்டு**

**Monitor 15" - 15,000/=**
**UPS - 600VA - 8,000/=**

மேலதிக பொருள்கள்
Computer and Acroce - Scaner, Toner, Printer, VCD Player (OSAKI), Ribbon (2.80, LQ 300)

T.P.No: 4590686.
SDS Computer Services,
125 A, Stanly Road,
Jaffna. (59787)

---

**பாடசாலை மாணவர்களுக்கான பயிற்சிநெறிகள் ஆரம்பம்**

GIT (G.C.E A/L)
ICT (Grade 10,11)
Kids Programming (Year1-10)
VISUAL BASIC (G.C.E O/L)

Start on: 20,21.04.2007

Softview Computer College
55, Arasady Rd, Jaffna.
T.P: 021 222[illegible]

## மோதல் தணிப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒருசில தினங்களுக்கு முன்னர் வெளிவிவகார அமைச்சின் செயலாளரும் அரச சமாதானச் செயலகத்தின் பணிப்பாளருமான கொஹன்ன நோர்வேத் தூதுவரைச் சந்தித்தார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினரை அவர் சந்தித்துப் பேச்சு நடத்துவார்.

தேக்கமடைந்துள்ள சமாதான முயற்சிகளை அடுத்தகட்டத்துக்கு நகர்த்துவது, மோதல்களை நிறுத்துவது ஆகியன குறித்த சர்வதேசத்தின் கரிசனை தொடர்பாக நோர்வேத் தூதுவர் புலிகளின் பிரதிநிதிகளுக்கு எடுத்து விளக்குவார் என்று அறியவருகிறது.

கொழும்பில் இருந்து ஹெலிகொப்டர் மூலம் வவுனியா வந்துசேரும் தூதர், வாகன அணியாக கிளிநொச்சி வந்துசேர்வார்.

கட்டுநாயக்க விமானத்தளம் மீது விடுதலைப் புலிகளின் வான் தாக்குதல் இடம்பெற்றபின்னர் நடைபெறவுள்ள இந்தப் பேச்சு முக்கியத்துவம் வாய்ந்தது என்று அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்தனர். (அ-1)

## கண்ணீர் அஞ்சலி

மூளாயைப் பிறப்பிடமாகவும் பம்பலப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட

### இளையதம்பி சோமஸ்கந்த

[இளைப்பாறிய மூத்த மருந்தாளர், யாழ்., கொழும்பு அரசினர் வைத்தியசாலை]

18.04.2007 புதன்கிழமை இரவு இறையடி சேர்ந்த செய்தி கேட்டு ஆறாத்துயர் அடைகிறோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரது ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

திரு.திருமதி அனுராஜ் குடும்பத்தினர், (வெள்ளவத்தை).
திரு.திருமதி சிவராஜா குடும்பத்தினர், பொன்னாலை.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி கந்தையா பாக்கியம்



கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் நவாலியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா பாக்கியம் நேற்று(18.04.2007) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கணபதி - மாணிக்கம் தம்பதியரின் அன்பு மகளும் சரஸ்வதி, இராசமணி, இராசையா (வவுனியா), மல்லிகாதேவி ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை, காந்தி மற்றும் தனபாலசிங்கம், லலிதா ஆகியோரின் அன்பு மாமியும் விஜயகுமாரி, ஜெயக்குமார், அனுஷாந் (பொறியியல்துறை, றுகுணு பல்கலைக்கழகம்), தனுஷியா, சுத்தானந், பத்மலோஜினி(ஜேர்மனி), சுதர்சனா(இத்தாலி), குகதாஸ், நிர்மலதாஸ், அரியதாஸ், புவிகரன் (பிரான்ஸ்), ஹஜிதரன் (டுபாய்), விஜிகரன், அனிதா, டசிகரன், காலஞ்சென்ற தனுஷந் ஆகியோரின் பேத்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(19.04.2007) வியாழக்கிழமை மு.ப. 11மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நவாலி வடக்கு வழுக்கையாறு இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நவாலி வடக்கு, மானிப்பாய். (59773) தகவல்: குடும்பத்தினர்.

### திருமதி மாணிக்கம் புனிதவதி



மட்டுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் 320/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கம் புனிதவதி நேற்று (18.04.2007) புதன்கிழமை காலமானார்.

அன்னார் மாணிக்கத்தின் அன்பு மனைவியும் கஜீபன், குலதீபன், டக்சினி, துஜீபன் ஆகியோரின் பாசமிகு தாயும் காலஞ்சென்றவர்களான கந்தையா - கண்ணம்மா தம்பதியரின் புதல்வியும் காலஞ்சென்றவர்களான கந்தையா - தங்கமுத்து தம்பதியரின் மருகமளும் வல்லிபுரம், திரவியம், காலஞ்சென்ற அழகம்மா மற்றும் தங்கரத்தினம், தவமணி, செல்வரத்தினம், பூபதி, அனுசியாவதி ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.04.2007) வியாழன் நண்பகல் 12மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

320/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம். (59777) தகவல்: கணவர், பிள்ளைகள், சகோதரர்கள்.

### வெற்றிவேலு இரத்தினம்

மறவன்புலோ, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வெற்றிவேலு இரத்தினம் நேற்று (18.04.2007) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மாணிக்கத்தின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற மாணிக்கவாசகர் மற்றும் சடாச்சரம், சண்முகலிங்கம், நிர்மலாதேவி, செல்வதேவி ஆகியோரின் அன்புத் தந்தையும் சொர்ணலட்சுமி, கலைச்செல்வி, அமிர்தகுமாரி, திருநாவுக்கரசு, சிவலிங்கம் ஆகியோரின் அன்பு மாமனும் பாலரஞ்சினி, கமலதாசன், சந்திரவதனி, நாகதர்ஷன், சோபிகா, டர்சன், செந்துரு, அஜந்தன், கஜானன், யசோதரன், ஜீவன், திப்குஸ்தா, யசிக்கா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.04.2007) வியாழக்கிழமை நாவற்குழி இல்லத்தில் மு.ப 11மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நாவற்குழி பிணமுருங்கை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நி.மு:- மறவன்புலோ, சாவகச்சேரி.
த.மு:- பாடசாலை அருகில், நாவற்குழி. (59780) தகவல்: திருமதி சிவலிங்கம் செல்வதேவி.

### திருமதி ஐயாத்துரை சரஸ்வதி



132/1, பிறவுண் வீதி, நீராவியடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஐயாத்துரை சரஸ்வதி (16.04.2007) திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - இராசம்மா தம்பதியரின் மகளும் காலஞ்சென்ற சின்னையா - தங்கச்சிஅம்மா தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற சின்னையா ஐயாத்துரையின் மனைவியும் கதிர்காமநாதன் (பிரான்ஸ்), வேணுகோபாலன் (லண்டன்), வரதராஜா (குஞ்சன், மாருதி ரேடியோ சென்ரர், யாழ்ப்பாணம்), சாந்தினி, ஜெயந்தினி ஆகியோரின் அன்புத்தாயும் காலஞ்சென்ற இராசையா மற்றும் செல்லையா, காலஞ்சென்றவர்களான இராசரத்தினம், கனகரத்தினம் மற்றும் பாலசிங்கம், அருளானந்தம் ஆகியோரின் சகோதரியும் றஜனி (பிரான்ஸ்), துளசி (லண்டன்), றூபினி (கௌரி), சசிகரன், ஜீவரத்தினம் ஆகியோரின் மாமியும் சாஜீசன், தர்சன், தர்சனா, விஷ்ணுக்கன், சோபிகன், மிதுனா, துசாந்தி ஆகியோரின் பேத்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.04.2007) வெள்ளிக்கிழமை மு.ப 11மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

132/1, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம். தகவல்: பிள்ளைகள், மருமக்கள். தொ.பே:- 021 2225443.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 19.04.2007இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org